31.12.2018 இல் முடிவடைந்த ஆண்டுக்கான தேறிய சொத்து ∴உரிமை மூலதனத்தில் மாற்றம்

கட்டுப்படுத்தும் தனியுருவின் உரிமையாளர்களுக்கு உடைமையாக்கத்தக்கது					
	பங்களித்த மூலதனம்	**ஜனாதிபதி நிதியம்**	**மீள் மதிப்பீட்டு மிகை**	**நிறுவக நிதி**	**மொத்த தேறிய சொத்து**
31 மார்கழி 2017ல் நிலுவை	744@433@540.00	7@078@501.15	131@630@743.37	(195@845@698.45)	687@297@086.07
கடந்த ஆண்டில் சீர் செய்யப்பட்ட நிதி	-	-	-	498@434.88	498@434.88
31 மார்கழி 2017ல் நிலுவை (மீளத்தரப்பட்ட)	744@433@540.00	7@078@501.15	131@630@743.37	(195@347@263.57)	687@795@520.95
மறுமதிப்பீட்டுப் பற்றாக்குறை	-	-	19@440@505.63	-	19@440@505.63
மானியங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்து	-	-	-	2@160@957.87	2@160@957.87
நடப்பு ஆண்டில் நிறுவக நிதியில் சேர்க்கப்பட்டவை	-	-	-	31@608@264.76	31@608@264.76
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிருந்தான பற்றாக்குறை	-	-	-	(104@071@500.10)	(104@071@500.10)
நிலையான சொத்துக்களின் நீக்கம்	-	-	(32@682@863.53)	-	(32@682@863.53)
ஆரச மற்றும் வேறு வழிகளில் பெறப்பட்ட மூலதன நிதி	98@193@544.00	-	-	-	98@193@544.00
31 மார்கழி 2018ல் நிலுவை	**842@627@084.00**	**7@078@501.15**	**118@388@385.47**	**(265@649@541.04)**	**702@444@429.58**

9.7 கணக்கியற் கொள்கைகள் - 2018

அடிப்படைக் கற்கைகளுக்கான தேசிய நிறுவகம் - இலங்கை

விசேடமான கணக்கியற் கொள்கைகள் - வருட இறுதி 31 மார்கழி 2018

1. பொதுவான கணக்கீட்டுக்கொள்கைகள்

1.1. இந்த நிதி அறிக்கைகள் வரலாற்றுக்கிரைய அடிப்படையில் இலங்கை அரச துறையின் உண்மைத்தன்மை அடிப்படையிலான கணக்கீட்டுத் தரத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் விே‘ட மீள்மதிப்பீட்டுக் குழுவுக்கமைவாக மோட்டார் வாகன மீள்மதிப்பீட்டிற்குப் பதிலாக இக்கணக்குகளைப்பாதிக்கும் பணவீக்கக் காரணிகளுக்கான சீராக்கல்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

1.2. இவ்வாறே ஆய்வுகூடக்கருவிகள்இ இயந்திரங்கள் மற்றும் கருவிகள்இ குளிர்சாதனப்பெட்டிகள்இ வளிச்சீராக்கிகள்இ தொடர்பாடல்சாதனங்கள்இ அலுவலக மற்றும் நானாவிதக் கருவிகள்இ விளையாட்டு உபகரணங்கள் என்பன விே‘ட மீள்மதிப்பீட்டுக் குழுவினால் மீள்மதிப்பீடு செய்யப்படுவதுடன் இக்கணக்குகளைப் பாதிக்கும் காரணிகள் எவையும் இல்லை.

1.3. 2011 இல் மீள்மதிப்பீடுசெய்யப்பட்ட நிலையான சொத்தின் பெறுமதி மற்றும் 2015ம் ஆண்டில் மற்றும 2018ம் ஆண்டில் மோட்டார் வாகனங்களின் பெறுமதி என்பன நிறுவக நிதியக்கணக்கினால் சீராக்கப்படும் மீள்மதிப்பு ஒதுக்கீடாகக் காட்டப்பட்டுள்ளது. மோட்டார் வாகனங்களின் மீள்மதிப்பீடானது கண்டி மோட்டார் போக்குவரத்துத்திணைக்களப் பரீட்சகரினால் 16.02.2015, 20.02.2015 மற்றும் 27.08.2018 இல் காணப்பட்ட சந்தைப் பெறுமதியுடன் மேற்கொள்ளப்பட்டது.

1.4. முன்னைய வருட இலக்கங்களும் சொற்றொடர்களும் தேவைப்படும் இடங்களில் தற்போதைய சமர்ப்பிப்புக்கு அமைவாக மீள ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

1.5. வெளிநாட்டு நாணய மாற்றுகை

எல்லா வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்களும் அவை செய்யப்பட்ட நேரத்திலுள்ள விகிதப்படி மாற்றீடு செய்யப்பட்டுள்ளன. வதியாதோர் வெளிநாட்டு நாணயக்கணக்கு மீதியானது நிதி நிலைமைக் கூற்றின் திகதியில் நடைமுறையிலருந்த விகிதப்படி கணக்கிடப்பட்டுள்ளது.

1.6. வரி விதிப்பு

உள்நாட்டு இறைவரித்திணைக்கள 1979 ம் ஆண்டு 28ம் இலக்க (திருத்தப்பட்ட) சட்டத்தின் பகுதிகள் 8(ய) (ஒஒஒஒ) ஆகியவற்றின் அடிப்படையில் இந்நிறுவகமானது இலங்கையில் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

2. சொத்துக்களும் அவற்றின் பெறுமதி மதிப்பிடலின் அடிப்படைகளும்

2.1. இருப்புக்கள்

இருப்பானது வரலாற்றுக்கிரய அடிப்படையில் கணிக்கப்பட்டுள்ளதுடன் எல்லா வழங்கல்களும் குஜகுழ அடிப்படையில் கணிக்கப்பட்டன.

2.2. நிலையான சொத்துக்கள்

2.2.1. நிலையான சொத்துக்களுக்கான செலவானது கொள்வனவு யல்லது கட்டுமானச்செலவு மற்றும் மேலதிகமாக ஏற்படும் செலவுகளின் கூட்டுத்தொகை ஆகும். 2.2.2 இல் குறிப்பிடப்பட்டதற்கு இணங்க நிலையான சொத்துக்களின்

பெறுமதிகள் அவற்றிற்கு ஏற்பட்ட செலவிலிருந்து பெறுமானத் தேய்வுகளைக் கழிப்பதன் மூலம் பெறப்பட்டது.

2.2.2. நூலகப் புத்தகங்களுக்கான செலவான ரூபா 1097477.65 ஆனது பாரம்பரிய சொத்துக்களில் சேர்க்கப்பட்டன.

2.2.3. ஆய்கூட உபகரணங்கள் மற்றும் அலுவலக மற்றும் ஏனைய உபகரணங்கள் பெறுமதி மற்றும் காட்சி நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை உள்ளடக்கியவற்றின் எழுதப்பட்ட பெறுமதி ரூ. 16,317,450.00 மற்றும் ரூ. 770,940.00.

2.2.4. நன்கொடைகளாக பெறப்பட்ட நிலையான சொத்துக்கள், 2018 ஆம் ஆண்டிலிருந்து ஒத்திவைக்கப்பட்ட பொறுப்பாக கொள்ளப்படும்

2.2.5. **நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வு**

நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வு ஏற்பாடுகள் அவற்றின் பயன்படு ஆயட்காலத்தில் கழிப்பதற்காக அவற்றிற்காகிய செலவுகளின் மீது பின்வருமாறு கணிக்கப்பட்டுள்ளன.

மோட்டார் வாகனங்கள்	20மூ
நூலகப் புத்தகங்கள்	33.33மூ
கட்டடம்	10மூ
ஆய்வுகூட உபகரணம்	10மூ
விளையாட்டு உபகரணம்	33.33மூ
கணனிகள்	25மூ
கணனி மென்பொருள்	25மூ
தளபாடங்களும் பொருத்துக்களும்	10மூ
தொடர்பாடல்	10மூ
வளிச்சீராக்கிகள்	10மூ
குளிர்சாதனப்பெட்டிகள்	10மூ
இயந்நிர உதிரிப்பாகங்கள்	10மூ
அலுவலகம்	
அறை லினென்	33.33மூ
தட்டுக்கள் மற்றும் உணவக உபகரணங்கள்	33.33மூ
ூ பாதுகாப்பு உபகரணங்கள்	10மூ
அலுவலக உபகரணங்கள்	20மூ
ளுரனெசல சொத்துக்கள்	10மூ
விரிவாக்கக்கூடிய சொத்துக்கள்	10மூ

ூபாதுகாப்பு உபகரணங்கள் - 1999 ம் ஆண்டிலிருந்து தேய்மான வீதம் 33.33மூ இலிருந்து 10மூ ஆக மாற்றப்பட்டுள்ளது.

நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வுகள் அவற்றை வாங்கிய திகதியிலிருந்து அகற்றும் திகதி வரை தரப்படுகிறது.

2.3. முதலீடு

தொழில் தருநர் மற்றும் ஊழியர்கள் ஜெகுளு இன் சேமலாப நிதிக்குப் பங்களித்த தொகைகள் தேசிய சேமிப்பு வங்கியில் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டள்ளன.

2.4. நுகர்வுக்கடன் நிதிக்குச் செலுத்தப்பட்ட தொகைகள் தேசிய சேமிப்பு வங்கியின் சேமிப்புக் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளன.

3. பொறுப்புக்களும் ஒதுக்கங்களும்

3.1. நிதி நிலைமைக் கூற்றின் திகதியின் போதுள்ள எல்லா தெரிந்த பொறுப்புக்களும் ஒதுக்கங்களும் கணக்கில் காட்டப்பட்டுள்ளன.

3.2. ஓய்வூதிய உபகாரப்பணம்

1983 ம் ஆண்டு உபகாரப்பணச்சட்ட இலக்கம் 12 இன் படி 5 அல்லது அதற்கு மேற்பட்ட காலம் தொடர்ந்து இந்நிறுவகத்தில் சேவையிலிருந்தவர்களுக்கு இளைப்பாற்று உபகரணப்பணம் செலுத்துவதற்கேற்ப இக்கணக்கில் ஒதுக்கீடு வெய்யப்பட்டுள்ளது. இது நிதி நிலைமைக் கூற்றில் பின்னுரிமைப் பொறுப்புக்களில் காண்பிக்கப்பட்டுள்ளது.

3.3. ஜேகுளு சேமலாபநிதி

31 மார்கழி 2018ல் ஊழியர்களது நிதியானது நிதி நிலைமைக் கூற்றில் விசேட நிதியாகக் காட்டப்பட்டுள்ளது.

4. வருமானங்கள்

4.1. அரச மானியம்

மீளாய்வுக்கு உட்படுத்தப்படும் ஆண்டில் மீண்டுவரும் செலவினங்களுக்கென பெறப்பட்ட அரச மானியங்கள் நடப்பாண்டு நிதிக்கூற்றில் காட்டப்பட்டுள்ளன. முன்னைய ஆண்டுகளில் திரண்ட மொத்த வருமானம் மற்றும் மூலதனம் அவ்வாறு பெறப்பட்ட மானியம் என்பன நிதி நிலைமைக் கூற்றில் நிறுவக நிதியங்கள் எனக் காட்டப்பட்டுள்ளன.

4.2. வெளிநாட்டு மற்றும் பிற மானியங்கள்

வருடத்தில் கிடைத்த அனைத்து வெளிநாட்டு மற்றும் பிற மானியங்கள் வரவு செலவுத்திரட்டில் காட்டப்பட்டுள்ளது. அவ்வாறு பெறப்பட்ட நடப்பு வருடத்தில் செலவு செய்யப்படாத மானியத்தொகையை விசேட நிதியும் மானியமும் எனும் தலைப்பின் கீழ் நிலுவைப்பத்திரத்தில் காட்டப்பட்டுள்ளது.

4.3. ஆராய்ச்சி மானிய நிதி

செலவு செய்யப்படாத மானியமானது நிதி நிலைமைக் கூற்றில் விசேட நிதியின் கீழ் ஆராய்ச்சி மானிய நிதி எனக் காட்டப்பட்டுள்ளது.

5. ஒதுக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதிப் பயன்பாடு

திருத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட மதிப்பீடானது மதிப்பீடு மற்றும் முன்னைய ஆண்டு மூலதன நிதியின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

Accountant

10. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை

அடிப்படைக் கற்கைகளுக்கான தேசிய நிறுவனத்தின் (NIFS) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது NIFS இன் உள்ளகக் கட்டுப்பாடுகளையும் நிதி அலுவல்களையும் பரிசீலிப்பதன் பொருட்டு ஆளுநர்கள் சபையின் ஓர் உபகுழுவாக சபையால் நியமிக்கப்படுகின்றது.

கூட்டங்கள்
2018 மார்கழி 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டின் போது, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது 4 கூட்டங்களை நடாத்தியுள்ளது. நிறுவனத்தின் பணிப்பாளராகிய பிரதம இயக்குநர் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் சகல கூட்டங்களுக்கும் அழைக்கப்பட்டிருந்தார்.
வருடாந்தக் கணக்காய்வுகளின் நோக்கெல்லை மற்றும் நிலவரம் தொடர்பாக வெளிப்புறக் கணக்காய்வாளர்களுடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.

உள்ளகக் கணக்காய்வும் அனர்த்த முகாமைத்துவமும்
உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டமானது நிறுவனத்தின் பிரதான பிரிவுகளையும் செயற்பாடுகளையும் உள்ளடக்கியமையை உறுதிசெய்து கொள்ளுவதன் பொருட்டு குழுவால் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

செயற்பாடுகள் நிறுவனத்தின் சொத்துக்களைப் பாதுகாக்கும் வகையில் அமைந்திருப்பதை உறுதிப்படுத்துதன் பொருட்டும் நிதி அறிக்கையிடல் முறைமையானது நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தலிலும் முன்மொழிதலிலும் தங்கியிருப்பதை உறுதிப்படுத்துதன் பொருட்டும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளை மீள்பரிசீலனை செய்து கலந்தாய்வு செய்ததுடன் நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான கணக்காய்வு ஐயவினாக்கள் கணக்காய்வாரள் நாயகத்தால் சமர்ப்பிக்கப்பட்டன.
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் சகல கூட்டங்களிலும் பிரசன்னமாகி இருக்குமாறு கணக்காளர் அழைக்கப்பட்டதுடன் NIFS இன் நிதிச் செயற்பாடுகள் தொடர்பான தெளிவுபடுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டன.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் சகல ஆழ்ந்தாய்வுகளிலும் பிரசன்னமாகி இருக்குமாறு உள்ளகக் கணக்காய்வாரள் அழைக்கப்பட்டிருந்தார். அவர் அவசியமான உள்ளகக் கணக்காய்வின் சாராம்சத்தையும் குறித்த காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட புலனாய்வுகளின் விபரங்களையும் முன்மொழிந்தார்.

உள்ளகக் கணக்காய்வு முடிவுகளுக்கான உரிய தலைவர்களின் பதில்கள் மீளாய்வு செய்யப்பட்டு அவசியமான திருத்தச் செயற்பாடுகள் பரிந்துரைக்கப்பட்டன.

உள்ளகக் கட்டுப்பாடுகள்
குழுவானது அதனுடைய கூட்டங்களின் போது, நிதி அனர்த்தங்களுக்கு உட்படுதல் தொடர்பில் கூடிய கவனஞ் செலுத்தி உள்ளகக் கட்டுப்பாட்டுத் தொகுதிகளின் நிறைவுத்தன்மை மற்றும் பயனுறுதி பற்றி மீளாய்வு செய்தது.

நிதிக் கூற்றுகள்
குழுவானது நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களையும் வருடாந்த அறிக்கையையும் வழங்குவதற்கு முன்பாக நம்பகத்தன்மை மற்றும் இலங்கையின் பொதுத் துறைக் கணக்கீட்டுத் தராதரங்களுடனும் ஏனைய நிதி ஒழுங்குவிதிகளுடனுமான இசைவு தொடர்பாக மீளாய்வு செய்தது. குழுவானது நிதிக் கூற்றுக்களின் வெளிப்படுத்துகையின் நிறைவுத்தன்மை பற்றியும் மீளாய்வு செய்தது.

வெளிப்புறக் கணக்காய்வாரள்கள்
குழுவானது கணக்காய்வாரள் நாயகத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட வருடாந்த நிதிக் கூற்றுக்கள், அவற்றுக்கான முகாத்துவத்தின் பதில்கள் தொடர்பில் கண்காய்வு அறிக்கையை மீளாய்வு செய்ததுடன் அவற்றின் பொருட்டு முற்கொணரப்பட்ட விடயங்கள் தொடர்பிலும் கவனஞ் செலுத்தியது. வெளிப்புறக் கணக்காய்வாரள்கள் முக்கியத்துவமுடைய சகல விடயங்கள் தொடர்பிலும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவுக்கு தெரியப்படுத்திக் கொண்டிருந்தனர். குழுவானது கூட்டங்களின் போது கணக்காய்வு அத்தியட்சகரைச் சந்தித்ததுடன் கணக்காய்வின் போது எழுந்த பிரச்சினைகள் தொடர்பில் கல்துரையாடி தேவையான சந்தர்ப்பபங்களில் திருத்தச் செற்பாட்டைப் பரிந்துரை செய்தது.

முடிவுகள்
நிறுவனத்தில் நிலவுகின்ற கட்டுப்பாட்டுச் சூழலானது அடிப்படைக் கற்கைகளுக்கான தேசிய நிறுவனத்தின் நிதி அறிக்கையிடலின் நம்பகத்தன்மை தொடர்பாக நியாயமான உறுதிப்பாட்டை வழங்குகின்றது, சொத்துக்கள் பாதுகாக்கப்படுகின்றன மற்றும் அரசாங்கத்தின் விதிகளுடனும் ஒழுங்குவிதிகளுடனும் இணக்கப்பாடானது பேணப்படுவதுடன் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் ஏதேனும் கணிசமான தவறான-கூற்றுக்களைக் கொண்டிருக்கவில்லை என்ற நிலைப்பாட்டை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது கொண்டுள்ளது.

11. நிதிக் கூற்றுக்கள் தொடர்பாகக் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

அடிப்படைக் கற்கைகளுக்கான தேசிய நிறுவனத்தின் 2018 ம் ஆண்டு மார்கழி மாதம் 31 ம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் சட்டரீதியான பரிசீலனைத் தேவைப்பாடு தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவிற்கமைவாக கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

1. நிதிக்கூற்று

1.1 முனைப்பழியுள்ள அபிப்பராயம்

அடிப்படைக் கற்கைகளுக்கான தேசிய நிறுவனத்தின் 2018 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31 ஆம் திகதிக்குரிய நிதி நிலைகூற்று மற்றும் அத்திகதியுடன் நிறைவுக்கு வரும் ஆண்டின் நிதி செயலாற்றுகைக் கூற்று, உரிமைப்பங்கு மாற்றங்கள் தொடர்பான கூற்று மற்றும் குறித்த திகதியுடன் நிறைவுக்கு வரும் ஆண்டின் நிதிப்பாய்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் என்பன முக்கியத்துவமுடைய கணிப்பீட்டுக் கொள்கைகளின் சாராம்சம் அடங்கலாக 2018 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவுக்கு வரும் ஆண்டுக்கான நிதிக் கூற்றறிக்கை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்படன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக எனது அறிக்கையானது காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தவிர்ந்த நிறுவனத்தின் இவ் அறிக்கையானது 2018 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிறுவனத்தின் நிதி நிலமை மற்றும் அத்திகதியில் நிறைவுற்ற ஆண்டுக்கான அதனுடைய நிதிச் செயலாற்றுகை மற்றும் அதனுடைய நிதிப்பாய்ச்சல் தொடர்பில் இலங்கையின் அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2. முனைப்பழியுள்ள அபிப்பராயத்திற்கான அடிப்படை

(a) இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்கள்

(i) இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்கள் 01 இன் பந்தி 99 இன் பிரகாரம், குறித்த காலத்தின் போது இனங் காணப்பட்ட வருமானம் மற்றும் செலவீனம் சம்பந்தமான சகல அம்சங்களும் நிதிச் செயலாற்றுகைக் கூற்றில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், நிறுவனத்தின் மீளாய்வின் கீழுள்ள ரூ. 32,116,648 மற்றும் ரூ. 17,659,343 பெறுமதியுடைய முறையே 29 கருத்திட்டங்களுடனும் 12 நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வேலைப்பட்டறைகளுடனும் தொடர்புடைய ஆண்டு வருமானம் மற்றும் செலவீனம் நிதிச் செயலாற்றுகைக் கூற்றில் பதிவு

செய்யப்பட்டிருக்கவில்லை. மீண்டெழும் செலவீனத்தை வெளிப்படுத்துகின்ற வகைப்படுத்தப்படாத ரூ.15,498,385 பெறுமதியான தொகையானது நிதிச் செயலாற்றுகைக் கூற்றில் வருமானம் மற்றும் செலவீனமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(ii) இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்கள் 03 இன் பந்தி 24(அ) இல் வரையறுக்கப்பட்டுள்ளவாறு, கட்டுப்பாடான கணக்கீட்டுக் கொள்கையில் ஏற்படும் ஓர் மாற்றமானது பின்னோக்கியதாக பிரயோகிக்கப்படுதல் வேண்டும். நிறுவனத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்படும் நிலையான சொத்துக்களுக்களை அதிகாரமளித்தலுக்கான ஓர் புதிய கொள்கையாக, உரிய அதிகாரமளித்தலானது மீளாய்வின் கீழுள்ள ஆண்டிற்கான ரூ. 504,182 பெறுமதியுடைய வருமானமாகப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இக் கொள்கையானது வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை, அல்லது சீர்ப்படுத்தல்கள் பின்னோக்கிய வகையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்கள் 07 இன் பந்தி 75 இன் பிரகாரம், சொத்துக்களுக்காகக் பயன்படுத்தப்படும் தேய்மான முறைமையானது ஆகக் குறைந்தது வருடாந்த அறிக்கையிடும் ஒவ்வொரு திகதியிலேனும் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், ஏதேனுமொரு முக்கியத்துவமுடைய மாற்றம் இருக்குமாயின், தேய்மானமானது மாற்றியமைக்கப்பட்டு இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமம் 03 இற்கு அமைவாகக் கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், நிறுவனத்தின் நடைமுறையற்ற சொத்துக்களுக்காகப் பயன்படுத்தப்படும் தேய்மான முறைமையானது மீளாய்வு செய்யப்பட்டு இருக்காமையால், ரூ. 123,805,941 பெறுமதியான சொத்துக்கள் முழுமையாகத் தேய்வடைந்த போதிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதற்கமைவாக, மதிப்பிடப்பட்ட தவறானது இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமம் 03 இற்கு ஏற்ப திருத்தியமைக்கப்பட்டு இருக்கவில்லை.

(b) கணக்கீட்டுக் கொள்கைகள்

(i) அரச மூலதனக் கொடைகளின் மூலமாகப் பெற்றுக் கொள்ளப்படுகின்ற சொத்துக்களின் அதிகாரமளித்தலானது நிதிச் செயலாற்றுகைக் கூற்றில் வருடாந்தம் சீர்செய்யப்படுதல் வேண்டுமாயினும், குறித்த வருடத்தின் போதும் முன்னய வருடத்தின் போதும் அரச மூலதனக் கொடைகளின் மூலமாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட ரூ.75,180,691 பெறுமதியான சொத்துக்களுக்கான கிரமக்குறைப்புச் சீர்செய்வுகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. மேலும், உரிய கொள்கையானது நிதிச் செயலாற்றுகைக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை.

(i) மீள்மதிப்பீட்டு ஒதுக்கின் வருட இறுதி மீதியானது ரூ. 118,388,385 ஆகும். எவ்வாறாயினும், நிறுவனமானது மீள்மதிப்பீட்டு மிகைக்கான கொள்கையை நிதிச் செயலாற்றுகைக் கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(c) கணக்கீட்டுக் குறைபாடுகள்

(i) 2007 ஆம் ஆண்டு ரூ. 63,015 செலவிட்டு கொள்வனவு செய்யப்பட்ட ஒரு குளிரூட்டியானது 2017 ஆம் ஆண்டில் முழுமையாகத் தேய்வடைந்திருந்தது. எவ்வாறாயினும், அவ்வருடத்தின் போது மீளாய்வின் கீழ் ரூ. 63,015 தேய்மானத் தொகையாக அத் தொகையால் தேய்மானம் மிகைப்படுத்திய கூற்றுக்கு வித்திடுவதால் தேய்மானச் செலவு மற்றும் திரட்டிய தேய்மானத்தில் வழங்கப்பட்டிருந்தது.

(ii) 2017 ஆம் ஆண்டிற்காகச் செலுத்தப்பட வேண்டிய கணக்காய்வுக் கட்டணமானது அட்டுறு செலவொன்றாக கணக்கீட்டுக்கு உட்படுத்தப்படவில்லை.

(iii) நடைமுறையல்லாச் சொத்துக்கள் பொருட்கள் கணிப்பீட்டுக் குழுவினால் திருத்தப்பட முடியாத மற்றும் கண்டறியப்பட முடியாதனவாக இனங்காணப்பட்ட முறையே ரூ. 29,853,300 மற்றும் ரூ. 6,037,985 பெறுமதியான சொத்துக்களை உள்ளடக்கியிருந்தன.

(d) கணக்கீட்டுக்கான சாட்சியங்கள் இல்லாமை

ரூ. 936,095 பெறுமதியான நிலையான சொத்துக்களுக்காக 1978 ஆம் ஆண்டின் 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கைக்கு அமைவாக, பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

எனது கணக்காய்வினை இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாக நான் மேற்கொண்டுள்ளேன். அந் நியமங்களுக்குக் கீழாகவுள்ள எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பிரிவின் கீழ் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. நான் பெற்றுக் கொண்டுள்ள கணக்காய்வுச் சாட்சியமானது எனது முனைப்பழியுள்ள அபிப்பராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்கு போதுமானதும் தகுந்ததும் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் கட்டுபாட்டுத் தரப்பினரினதும் பொறுப்புக்கள்

இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நோக்கை வழங்கக் கூடிய வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ்கூற்று அற்ற நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையிலான உள்ளகக் கட்டுப்பாட்டிற்கும் முகாமைத்துவம் பொறுப்புடையதாகும்.

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது நிறுவனத்தை தொடர்ந்தும் நடாத்திச் செல்லும் இயலுமையைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும் என்பதோடு முகாமைத்துவம் நிறுவனத்தை முடிவுறுத்துவதற்கு கருதுமாயின் அல்லது வேறு ஏதேனும் மாற்றுவழிகள்

இல்லாதிருக்கும் போது செயற்பாட்டை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தபின் தவிர தொடர்ந்தும் நடாத்திச் செல்லும் அடிப்படையின் மீது கணக்குள் வைத்தல் மற்றும் நிறுவனத்தின் தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்குரிய விடயங்களை கண்டறிவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்புக்கு விடயங்களை வெளிக்கொணர்வது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கட்டுப்பாட்டுத் தரப்பினரே நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயற்பாட்டை மேற்பார்வை செய்வதற்குப் பொறுப்புடையோராவர்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் உப-பிரிவு 16(i) இற்கு அமைவாக நிறுவனத்தினால் வருடாந்த மற்றும் காலக்கிரமத்திற்குரிய நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதற்கு ஏதுவாக நிறுவனமானது அதனுடைய வருமானம், செலவீனம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணிச்செல்லல் வேண்டும் எனக் கோரப்படுகின்றது.

1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையை வழங்குதல் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தலானது உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருப்பினும் இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கமைவாக கணக்காய்வு மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. பிறழ் கூற்றுக்கள் மோசடிகள் அல்லது தவறுகளிலிருந்து எழக்கூடும் என்பதுடன், பொருண்மையானவையாகவும் கருதப்படுகின்றன, அவை தனியாகவோ அல்லது கூட்டாகவோ இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயனாளிகளால் எடுக்கப்படும் பொருளாதார ரீதியான தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்தக் கூடியன என எதிர்பார்க்கப்படுகிறது.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழிற்துறைப் பின்னணியுடன் இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. அத்துடன்,

- மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அபாயங்களை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வுச் செயன்முறைகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய அபாயங்களைத் தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமானதும் மற்றும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாக அமைகிறது. பொருண்மையான பிறழ் கூற்றினால் ஏற்படக்கூடிய தாக்கத்தினை விட மோசடிகளால் ஏற்படக்கூடிய தாக்கமானது பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறாக ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே

விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டைத் தவிர்ப்புச் செய்தல் ஆகியன மோசடிகள் ஏற்பட காரணமாக அமைகின்றன.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வுச் செயன்முறைகளைத் திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டினைப் பற்றிய விளக்கத்தைப் பெற்றுக் கொண்டாலும், அது நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுதித்தன்மை தன்மை தொடர்பான அபிப்பராயமொன்றைத் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்தப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தப்பாடு மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளினதும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினதும் நியாயத்தன்மை பற்றி மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவனத்தின் தொடர் இருப்பு தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உண்டா என்பது தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டுக்காக நிறுவனத்தின் தொடரிருப்பு சம்பந்தமான அடிப்படையை ஈடுபடுத்தும் தொடர்புத்தன்மை தீர்மானிக்கப்படுகிறது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதாக நான் முடிவிற்கு வருவேனாயின் நிதிக் கூற்றுக்களில் தொடர்புடைய வெளிக்கொணர்வுகள் தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் அவதானம் செலுத்துமாறோ அல்லது, அந்த வெளிக்கொணர்வுகள் போதுமானவையாக இல்லையெனில் எனது அபிப்பிராயத்தை மாற்றியமைக்குமாறோ நான் கோரப்படுகிறேன். எனது முடிவுகள் எனது கணக்காய்வாளரின் அறிக்கையின் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டவையாகும். எவ்வாறாயினும் எதிர்காலச் சம்பவங்களும் நிலைமைகளும் நிறுவனத்தின் தொடர் இருப்பு முடிவுறுத்தப்படத்தக்க நிலைக்கு நிறுவனத்தை இட்டுச் செல்லலாம்.

- நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த வெளிக்கொணர்வு, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் பற்றி வெளிப்படுத்தல்களையும் மற்றும் நியாயமான வெளிக்கொணர்வைச் செய்யத்தக்க வகையில் அடிப்படையான பரிமாற்றங்களை நிதிக் கூற்றுக்கள் வெளிப்படுத்துகின்றனவா என்பதையும் உள்ளடக்கும் வகையில் மதிப்பீடு செய்தல்.

  எனது கணக்காய்வில் இனங் காணப்பட்ட கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுத் தரப்பினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திற்கு அமைவாக பின்வரும் தகவல்கள வெளிப்படுத்தப்படுகின்றன.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(a) இன் பிரகாரம் இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பராயத்திற்கான அடிப்படையில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர, கணக்காய்வின் நோக்கத்திற்கு அவசியமானவை என நான் கருதுகின்ற உரிய தகவல்களும் விளக்கங்களும் நியாயமாகப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன, அத்துடன் நிறுவனமானது முறையான நிதிசார் பதிவுகளைப் பேணியுள்ளது.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6(i) (d) (iii) இன் பிரகாரம் முன்வைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் இணங்குகின்றன.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6(i) (d) (iv) இன் பிரகாரம் கடந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில், பின்வரும் கூற்றுக்கள் தேவைப்படுத்தப்படுத்தப்பட்ட சகல பொருண்மையான விடயங்களின் போதும் அவதானங்கள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை.

2.1. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(d) இற்கு அமைவாக நிறுவனத்தினால் கைச்சாத்திடப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தில் நிறுவனத்தின் கட்டுப்படுத்தும் அமைப்பின் எவரேனும் உறுப்பினர் வர்த்தகம்-சாரத தன்மைக்குரிய நேரடியான அல்லது மறைமுகமான ஆர்வத்தைக் கொண்டிருக்கிறார்.

2.2. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(f) இற்கு அமைவாக, பின்வருவன தவிர்ந்த நிறுவனத்தின் கட்டுப்படுத்தும் அமைப்பினால் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் பிரயோகிக்கப்படத்தக்க எழுத்து மூலமான சட்டத்துடனோ அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடனோ நிறுவனமானது இணங்கியருக்கவில்லை.

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	**இணங்காமை**
(a) நிதிப் பிரமாணம் 102	ரூ.10,219,135 பெறுமதியான தேடிக் கிடைக்காத பொருட்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(b) நிதிப் பிரமாணம் 770 (2)	2017 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31 ஆம் திகதியிலுள்ளவாறான பொருடகள் கணிப்பீட்டின் போது அரசாங்கப் படிவங்கள் பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை ஆதலால், குழுவால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை.

(c) 2003 ஆம் ஆண்டு ஆனி மாதம் 02 ஆம் திகதியிடப்பட்ட PED/12 இலக்கமுடைய பொது நிறுவனங்களுக்கான சுற்றிக்கை	நிதிக் கூற்றுக்கள் நிதி ஆண்டானது முடிவடைந்து 60 நாட்களினுள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு வழங்கப்படுதல் வேண்டும் ஆயினும், நிறுவனமானது 2018 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களை 2019 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 20 ஆம் திகதியன்றே சமர்ப்பித்துள்ளது.

2.3. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(g) இற்கு அமைவாக, பின்வருவன தவிர்ந்தவற்றின் பொருட்டு நிறுவனமானது அதனுடைய அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளுக்கு அமைவாகச் செயலாற்றியுள்ளது;

அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடைமகள்	**அவதானங்கள்**
(a) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 14 (1)	நிறுவனமானது ஒவ்வொரு நிதி ஆண்டினதும் இறுதியின் பின்னர் உடனடியாகவே ஆண்வாண்டின் போதான அதனுடைய செயற்பாடுகள், பொறுப்புகள் மற்றும் செயலாற்றுகை தொடர்பாகவும் அதனுடைய கொள்கை மற்றும் நிகழ்ச்சிநிரல் தொடர்பாகவும் வரைபு வருடாந்த அறிக்கை ஒன்றைத் தயாரித்தல் வேண்டும். அந்த அறிக்கையானது அவ்வாண்டின் போது உரிய அமைச்சரினால் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த ஏதேனும் பணிப்புரைகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும். அவ்வறிக்கையின் பிரதிகள் ஆண்டிறுதியின் பின்னர் 04 மாதங்களினுள் உரிய அமைச்சரிற்கும் மற்றும் நிதி அமைச்சர், திட்டமிடல் அமைச்சர் மற்றும் கணக்காய்வாரள் நாயகம் ஆகியோருக்கும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் மீளாய்வின் கீழான ஆண்டிற்குரிய வரைவு வருடாந்த அறிக்கையும் முன்னய ஆண்டிற்குரிய இறுதி வருடாந்த அறிக்கையும் கணக்காய்வுத் திகதியான 2019 ஆம் ஆண்டு தை மாதம் 29 இல் தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை.
(b) 2003 ஆம் ஆண்டு ஆனி மாதம் 02 ஆம் திகதியிடப்பட்ட PED/12 இலக்கமுடைய பொது நிறுவனங்களுக்கான சுற்றிக்கையின் பந்தி 5.1.3.	ஓர் ஒருங்கிணைந்த திட்டமானது 03 வருடங்களிற்குக் குறையாத காலப் பகுதிக்குத் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அத்திட்டமானது வருடாந்தம் இற்றைப்படுத்தப்பட்டு கணக்காய்வாளர் நாயகம், பொதுத் திறைசேரி, உரிய அமைச்சு மற்றும் பொது நிறுவனங்களுக்கான திணைக்களம் ஆகிவற்றிற்கு ஒவ்வொரு நிதியாண்டினதும் ஆரம்பத்திற்கு 15 நாட்களுட்கு முன்னர் முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரத்துடன் முன்னிலைப்படுத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், நிறுவனமானது

அதற்கமைவாக ஒருங்கிணைந்த திட்டத்தைத் தயாரித்து முன்னிலைப்படுத்தியிருக்கவில்லை. மேலும், நிறுவனத்தின் முழுமையான குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதன் பொருட்டு வருடாந்த செயற் திட்டமானது தயாரிக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வின் கீழுள்ள வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள செயற் திட்டமானது நிறுவனத்தின் ஆராய்ச்சிக் கருத்திட்டங்களை மாத்திரமே உள்ளடக்கியுள்ளது.

2.4. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (h) இற்கு அமைவாக, பின்வருவன தவிர்ந்தவற்றின் பொருட்டு நிறுவனத்தின் வளங்கள் காலவரையறையினுள்ளும் பிரயோகிக்கப்படத்தக்க சட்டங்களுக்கு இணங்கவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் மற்றும் பயனுறுதிமிக்க வகையிலும் பெற்றுக்கொள்ளப்பட்டும் பயன்படுத்தப்பட்டும் உள்ளன.

(a) நிறுவனத்திற்கான மென்பொருள் தொகுதியினை விருத்தி செய்வதற்காக 3 வருடங்கள் கழிந்துள்ளளதுடன் ரூ.660,000 ஆனது முற்பணமாகச் செலுத்தப்பட்டுள்ள போதிலும், சேவை வழங்குநர் அப்பணியை நிறைவுசெய்யத் தவறியுள்ளார். நிறுவனமானது உடன்படிக்கைக்கு அமைவாக தாமதிப்புக் கட்டணத்தை அறிவிட்டிருக்கவில்லை, ஆயினும் நிறுவனமானது இக் கருத்திட்டத்தின் பொருட்டு ரூ. 6,864,960 பெறுமதியான கணனி உபகரணங்களைக் கொள்வனவு செய்துள்ளது.

(b) மீளாய்வின் கீழுள்ள ஆண்டிற்கான பெறுகைத் திட்டமானது சீராய்வு செய்யப்பட்டு இக்கவில்லை என்பதுடன் சபையானது அதற்குரிய அனுமதியை 2018 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 29 ஆம் திகதி வழங்கியுள்ளது. பெறுகைச் செயற்பாடுகளின் ஒட்டுமொத்த முன்னேற்றமானது 56 சதவீதமாகவிருந்தது. அதாவது, பெறுகைத் திட்டமானது ஒரு பயனுறுதிமிக்க கட்டுப்படுத்தும் காரணியாகப் பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை.

(c) அடிப்படைக் கற்கைகளுக்கான தேசிய நிறுவனமானது பொருட்களுக்கான கோரிக்கைகளை மேற்கொள்கின்ற போது அத்தருணத்திலுள்ள நிதி நிலைமை தொடர்பில் ஆராய்வதில்லை என்ற காரணத்தினால், கிடைக்கத்தக்க நிதி நிலைமை பற்றி உறுதிப்படுத்திக் கொள்ளுதலானது பெறுகைச் செயன்முறைகளின் முற்-தேவைப்பாடாக உள்ளபோதிலும், மீளாய்வின் கீழுள்ள ஆண்டின் போது ரூ.9,261,310, US$ 2,697 மற்றும் CHF 76,330 பெறுமதியான நிறைவுசெய்யப்படாத செயன்முறைகள் காணப்படுகின்றன.

(d) மீளாய்வின் கீழுள்ள ஆண்டின் போதும் முன்னய ஆண்டுகளின் போதும் முதன்மையான கருத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதிகள் பயன்படுத்தப்படாமையின் காரணமாக, மீளாய்வின் கீழுள்ள ஆண்டின் மார்கழி மாதம் 31 ஆம் திகதியன்று செலவு செய்யப்படாமல் ரூ. 94,478,204 மீதியாகவிருந்தது.

(e) திகன விடுதியிலிருந்து நிறுவனத்திற்குப் பயணிக்கும் நோக்கத்திற்காக நிறுவனத்தின் வாகனங்கள் நிறுவனத்தின் 4 உத்தியோகத்தர்களால் அதிகாரமளிக்கப்படாமல் பயன்படுத்தப்பட்டமையின் காரணமாக, ரூ. 203,852 இழப்பு நிறுவனத்திற்கு ஏற்பட்டுள்ளது.

3. ஏனைய கணக்காய்வு அவதானங்கள்

(a) நிறுவனத்தின் வருடாந்த ஆராய்ச்சி மீளாய்விற்கெனச் சேகரிக்கப்பட்டிருந்த ரூ.1,122,500 பெறுமதியான வருமானமானது வரவுசெலவுத் திட்டத்தில் இனங்காணப்பட்டு இருக்கவில்லை.

(b) கிடைக்கப் பெற்றிருந்த ஆராய்ச்சி மானியங்களில், ரூ. 25,679,319 பெறுமதியான மீதியானது மீளாய்வின் கீழுள்ள ஆண்டின் மார்கழி மாதம் 31 ஆம் திகதியன்று எஞ்சியிருந்தது. முன்னய ஆண்டிற்குரிய ஆராய்ச்சிக் கருத்திட்டங்களுடன் தொடர்புடைய பயன்படுத்தப்படாத மீதியாக ரூ. 1,984,035 காணப்பட்டது. மேலும், மீளாய்வின் கீழுள்ள ஆண்டின் போது 3 ஆராய்ச்சிக் கருத்திட்டங்களுக்கெனக் கிடைக்கப் பெற்றிருந்த ரூ. 220,000 ஐப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கையானது எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(c) V.W.R. International Ltd நிறுவனத்திற்கு இரசாயனப் பதார்த்தங்களை இறக்குமதி செய்வதற்கென 2013 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 18 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த ரூ. 55,863 பெறுமதிக்குரிய முற்பணமானது, அப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளாமலேயே நாட்குறிப்பேட்டுப் பதிவு 476 இலிருந்து பதிவழிப்புச் செய்யப்பட்டுள்ளது.

(d) பொது நிறுவனங்களுக்கான பணிப்பாளர் நாயகத்தின் PED/12 இலக்கமுடைய 2003 ஆம் ஆண்டு ஆனி மாதம் 02 ஆம் திகதியிடப்பட்ட சுற்றிக்கையின் பந்தி 5.2.5. இன் பிரகாரம், வருடாந்த வரவுசெலவுத் திட்டமானது ஒருங்கிணைந்த திட்டத்திற்கு அமைவாக நீண்ட-காலக் குறிக்கோள்களை அடைவதற்கான ஓர் கருவியாகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும். திருத்தியமைக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டமானது ஆளுநர்கள் சபையினால் 2018 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 29 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், குறித்த ஆண்டுக்குரிய வரவுசெலவுத் திட்டமானது ஓர் நிதி ரீதியான கட்டுப்படுத்தும் காரணியாக பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

(e) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டிருந்த அவதானங்களின் தற்போதய நிலவரத்தைப் பரிசீலித்த போது, மீளாய்வுக்குரிய ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த 29 அவதானிப்புகளில், 6 மாத்திரமே தீர்க்கப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்தின
கணக்காய்வாளர் நாயகம்

12. கணக்காய்வாரளர் நாயகத்தின் அறிக்கை மீதான ஆளுநர்கள் சபையின் அவதானங்கள்

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இல்க்கத் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 இன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டுக்குரிய அடிப்படைக் கற்கைகளுக்கான தேசிய நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாகவும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குவிதித் தேவைப்பாடுகள் தொடர்பாகவும் கணக்காய்வாரள் நாயகத்தினால் 2019 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 13 ஆம் திகதி வழங்கப்பட்ட அறிக்கை தொடர்பில் ஆளுநர்கள் சபையினால் தயாரிக்கப்பட்டு 2020 ஆம் ஆண்டு மாசி மாதம் 14 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்ட அவதானங்கள்.

1.2. (a) இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்கள்

(i) நிறுவனத்தின் பல்வேறுபட்ட கருத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வேலைப்பட்டறைகளின் பொருட்டு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த நிதிகள் நிறுவனத்தின் பொறுப்புக்களின் கீழாக தனியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளன.

நிகழ்ச்சித்திட்டங்களின் பொருட்டு செலவு செய்யப்பட்ட மீண்டுவரும் செலவீனங்கள் குறிப்பு 14A இன் கீழ் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு மானிய வருமானமாகவும் குறிப்பு 20A இன் கீழ் மானியச் செலவுகளாகவும் நிதிச் செயலாற்றுகைக் கூற்றில் காட்டப்பட்டுள்ளன. மேலும், நிலையான சொத்துக்கள் மானியங்களிலிருந்து கொள்வனவு செய்யபட்பட்டிருந்தமையால் செலவு செய்யப்பட்ட மூலதனச் செலவீனங்கள் தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் தொடர்பான கூற்றில் காட்டப்பட்டுள்ளன.

உரிய கருத்திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய மீதிகள் குறிப்பு 11A இன் கீழ் குறித்தொதுக்கப்பட்ட மானியங்களாக நிதிச் செயலாற்றுகைக் கூற்றில் காட்டப்பட்டுள்ளன. கருத்திட்டமும் நிகழ்ச்சித்திட்டமும் நிறைவுற்ற பின்னர் மீதியாகவிருந்த நிதிகள் அந்நிதிகளை வழங்கிய நிறுவனத்திற்கு திருப்பியனுப்பப்பட்டுள்ளன.

மீளாய்வின் கீழுள்ள ஆண்டின் போது, செலவு செய்யப்பட்ட மீண்டுவரும் செலவீனத்தின் ரூ. 15,498,385 தொகையானது நிதிச் செயலாற்றுகைக் கூற்றின் 14A இன் கீழ் வருமானமாகவும் குறிப்பு 11A இன் கீழ் செலவாகவும் காட்டப்பட்டுள்ளதுடன் மூலதனச் செலவீனத்தின் ரூ.2,160,957.87 தொகையானது நிதிச் செயலாற்றுகைக் கூற்றில் தேறிய சொத்துக்களில் மானியங்களிலிருந்து கொள்வனவு செய்த நிலையான சொத்துக்களாகவும் காட்டப்பட்டுள்ளன.

எஞ்சிய மீதியாகிய ரூ. 2,008,563.11 ஆனது குறிப்பு 11 இன் கீழும் ரூ. 23,778,722.17 ஆனது குறிப்பு 11A இன் கீழும் காட்டப்பட்டுள்ளன.

(ii) நிறுவனத்திற்கு அன்பளிப்புகளாகக் கிடைக்கப் பெற்றுள்ள நிலையான சொத்துக்களை வேறுபிரித்து இனங்காண்பதிலுள்ள நடைமுறைச் சிக்கல் காரணமாக, மீளாய்வின் கீழுள்ள ஆண்டின் போது முற்திகதியிடும் சீர்ப்படுத்தலானது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், அவசியமான சீர்ப்படுத்தல்களைச் செய்வதற்கும் உரிய கணக்கீட்டுக் கொள்கையை எதிர்காலத்தில் வெளிப்படுத்துவதற்கும் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

(iii) நிறுவனத்தின் நடைமுறையல்லாச் சொத்துக்கள் தொடர்பான மீள்மதிப்பீட்டுப் பணியானது நிறைவுபெற்றுள்ளது. அதற்கமைவாக மதிப்பீட்டு அறிக்கைகள் மதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து கிடைக்கப்பெற்றதும் உரிய சீர்ப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படும். அத்துடன், முழுமையாகத் தேய்வடைந்துள்ள போதிலும் தற்பொழுதும் பாவனையிலுள்ள சொத்துக்களின் பெறுமதிகளும் மீளாய்வு செய்யபபடும்.

(b) கணக்கீட்டுக் கொள்கைகள்

(i) அரசாங்க மூலதன மானியங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக வருடாந்தத் தேய்மானக் கட்டணத்திற்குச் சமனான தொகையின் மூலமான கடன்கழிப்பின் பொருட்டுக் கணக்கீட்டின் மூலமாக அவசியமான சீர்ப்படுத்தலைச் செய்வதற்கும் உரிய கணக்கீட்டுக் கொள்கையை வெளிப்படுத்துவதற்கும் கருத்திற் கொள்ளப்படுகிறது.

(ii) ஆண்டின் போது அகற்றப்பட்ட ரூ. 32,682,863.53 பெறுமதியுடைய சொத்துக்களின் தேறிய பெறுபேறானது மீள்மதிப்பீட்டு ஒதுக்கிலிருந்து அகற்றப்பட்டுள்ளது. மீளாய்வின் கீழுள்ள ஆண்டின் போது, வாகனங்கள் தொடர்பான மீள்மதிப்பீட்டு இலாபமானது ரூ. 19,440,505.63 ஆகும். அதற்கமைவாக ரூ. 118,388,385 மீதியாகவுள்ளது. நிதிக் கூற்றுக்களில் அவசியமான வெளிப்படுத்துகைகளை மேற்கொள்வதற்குக் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

(c) கணக்கீட்டுக் குறைபாடுகள்

(i) ரூ. 63,015 மதிக்கத்தக்க குளிரூட்டி தொடர்பான தவறான மிகைத் தேய்மானத் தொகையாகிய ரூ. 6,031.50 ஐத் திருத்தியமைத்துக் கொள்வதன் பொருட்டு நாளேட்டுப் பதிவு J/226 இனூடாக கணக்குகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ii) 2016 ஆம் ஆண்டுக்குரிய கணக்காய்வுக் கட்டணத்திற்கான விவரப்பட்டியலானது பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் கொடுப்பனவும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டுக்காக, ரூ. 500,000 ஆனது ஓர் செலவீனமாகவும் ஓர் அட்டுறு செலவாகவும் அரச கணக்காய்வுக் கட்டணமாகக் காட்டப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், 2017 ஆம் ஆண்டுக்குரிய கணக்காய்வுக் கட்டணத்திற்கான உண்மையான கொடுப்பனவானது நடைமுறையிலுள்ள ஏற்பாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகையானதாகும். ஏற்பாட்டின் கீழ் அதற்குரிய சீர்ப்படுத்தல் எதுவும் மேற்கொள்ளப்படாமையால், அதன் பொருட்டு அவசியமான சீர்ப்படுத்தல்களை மேற்கொள்வதற்குக் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

(iii) மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள திருத்திப்பயன்படுத்த முடியாத (unserviceable) சொத்துக்களைப் பெற்று ஏலத்தில் விற்பதற்குரிய நடவடிக்கையானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இனங்காணப்பட முடியாத (untraceable) பொருட்களை ஆய்தந்தறிந்து கொள்வதன் பொருட்டு உப பொருள்விபரப் பட்டியலைப் பேணுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் பின்னர், மேலும் இனங்காணப்பட முடியாத பொருட்கள் காணப்படுமாயின், அதற்கமைவாக நடவடிக்கையானது மேற்கொள்ளப்படும்.

(d) கணக்காய்வுச் சான்று இல்லாமை

திறைசேரிச் சுற்றறிக்கைக்கும் அரசாங்க முறைமைக்கும் அமைவாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்றினைத் தொகுத்துப் பராமரிப்பதற்கான ஆரம்பப் படியாக, நிறுவனமானது மதிப்பீட்டுத் திணைக்களத்தின் பங்களிப்புடன் அதனுடைய சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்துள்ளது. மதிப்பீட்டு அறிக்கைகள் தற்பொழுது பெற்றுக் கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

மேலும், முகாமைத்துவமானது நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை SARASA ERP மென்பொருளைப் பயன்படுத்திப் பேணுவதிலுள்ள வினைத்திறனையும் பயனுறுதியையும் கருத்திற் கொண்டுள்ளதுடன் உரிய பரீட்சார்த்தச் சோதனைச் செயற்பாடுகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

மீள்மதிப்பிடல் செயற்பாடானது நிறைவுபெற்றதும், நிலையான சொத்துக்கள் பதிவேடானது புதிய மென்பொருளை நிறுவுவதன் மூலமாகப் பேணப்படும்.

2.2. சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

(a) காணமற்போன பொருட்களைக் கண்டறிவதன் பொருட்டு உப பொருள்விபரப் பட்டியல்களின் பேணுகையானது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. காணமற்போன பொருட்களில் பெரும்பாலானவை இவ்வணுகு முறையின் மூலமாக இனங்காணப்படுமென எதிர்பார்க்கப்படுவதுன் மேலும் அவ்வாறான பொருட்கள் காணப்படுமாயின், அவை தொடர்பான நடவடிக்கையானது மேற்கொள்ளப்படும்.

(b) 2018 இலிருந்து பொருட் கணக்கெடுப்புகளின் போது அரசாங்கப் பொதுப் படிவங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

(c) சனாதிபதியால் நியமிக்கப்படுகின்ற தலைவரின் பதவிநிலையானது 2019 ஆம் ஆண்டு ஆடி மாதம் 23 ஆம் திகதி வரை வெற்றிடமாகக் காணப்பட்டமையால், 2019 ஆம் ஆண்டு ஆவணி மாதம் வரை சபைக் கூட்டங்கள் நடாத்தப்படவில்லை.

அதன் விளைவாக, 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைச் சபையின் அங்கீகாரம் இன்றிச் சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், தேசிய கணக்காய்வுச் சபையானது நிதிக் கூற்றுக்களை சபையின் பிரதிநிதித்துவமின்றி ஏற்றுக்கொள்ள மறுத்தது.

எனவே, வருடாந்த நிதிக் கூற்றுக்களை சபையின் அங்கீகாரத்துடன் சமர்ப்பித்தலானது 2019 ஆம் ஆண்டு ஆவணி மாதம் வரை தாமதாமாகியது.

2.3. அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகள்

(a) 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை

2017 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையைக் குறித்த திகதியில் சமர்ப்பிக்க முடியவில்லை:

1. வருடாந்த அறிக்கையைத் தொகுப்பதில் ஈடுபட்டிந்த உத்தியோகத்தரின் இராஜினாமா காரணமாக, ஏனைய உத்தியோகத்தர்கள் அவர்களுடைய வழமையான மற்றும் அவசரமான கடமைகளை நிறைவேற்றிக் கொண்டு இப் பணியையும் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

2. வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டியிருந்த கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் தமிழ் மொழிபெயர்ப்பானது 2018 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 26 ஆம் திகதியே கிடைக்கப் பெற்றிருந்தது.

3. அதன் பின்னர், வருடாந்த அறிக்கையின் வரைபுப் பிரதியானது தயாரிக்கப்பட்டு, உரிய அமைச்சின் அங்கீகாரத்துடன் அது 2019 ஆம் ஆண்டு தை மாதம் 31 ஆம் திகதி அச்சிடலுக்காக அனுப்பப்பி வைக்கப்பட்டது.

4. 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையின் தொகுப்பானது உரிய அமைச்சினூடாக அமைச்சரவை அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது, அங்கீகாரமானது கிடைக்கப் பெற்றவுடன், அது பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை

பின்வரும் காரணங்கள் 2018 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் தாமதத்தை ஏற்படுத்தியுள்ளன:

1. சனாதிபதியால் நியமிக்கப்படுகின்ற தலைவரின் பதவிநிலையானது 2019 ஆம் ஆண்டு ஆடி மாதம் 23 ஆம் திகதி வரை வெற்றிடமாகக் காணப்பட்டமையால், 2019 ஆம் ஆண்டு ஆவணி மாதம் வரை நிதிக் கூற்றுக்களுக்கான சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக 2019 ஆம் ஆண்டு ஆவணி மாதம் வரை சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

2. சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டதன் பிற்பாடே வருடாந்த நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாரள் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

3. நிதியாண்டு 2018 இற்கான கணக்காய்வு அறிக்கையானது 2019 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 13 ஆம் திகதியே கிடைக்கப் பெற்றிருந்தது.

4. முன்னய ஆண்டுகளைப் போலல்லாது, நிறுவனமானது கணக்காய்வு அறிக்கையின் ஆங்கில மற்றுத் தமிழ் மொழிபெயர்ப்புகளைச் செய்ய வேண்டியுள்ளமையால் மேலதிக காலமானது தேவைப்படுகின்றது.

(b) பொது நிறுவனங்களுக்கான சுற்றறிக்கைக்கு அமைவாக 5-வருட காலத்திற்குரிய ஒருங்கிணைந்த திட்டமொன்றைத் தயாரிப்பதற்கான பணியானது தற்பொழுது மேற்கொள்ளப்படுவதுடன் 90% ஆன வேலையானது நிறைவடைந்துள்ளது. இந் நோக்கத்தின் பொருட்டு விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சிக் உதவியானது பெறப்பட்டுள்ளதுடன் இதனை இற்றைப்படுத்துவதற்கும் ஒவ்வொரு வருடத்தினதும் ஆரம்பத்திற்கு முன்னர் உரிய அதிகாரத் தரப்புகளிடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

நிறுவனத்தின் குறிக்கோள்களை அடைவதன் பொருட்டு, பிரதான செயலாற்றுகைச் சுட்டிகளை உள்வாங்கி 2019 ஆம் ஆண்டிலிருந்து செயற் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

செயற் திட்டத்தில் உள்ளடக்கப்படும் வருடாந்த ஆராய்ச்சிச் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக, செயற் திட்டத்தில் பெறுகைத் திட்டத்தையும் ஏனைய நிதி ரீதியான மற்றும் நிர்வாக ரீதியான செயற்பாடுகளையும் உள்ளடக்குவதற்குக் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

2.4. வளங்களின் பெறுகை மற்றும் பயன்பாட்டின் சிக்கனத்தன்மை, வினைத்திறமை மற்றும் பயனுறுதித்தன்மை

(a) குறிப்பாக ERP மென்பொருள் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூ.6,864,960 பெறுமதியான கணனி உபகரணங்களைக் கொள்வனவு செய்தமைக்கான காரணங்கள் பின்வருமாறு:

சேவர் இயந்திரம் (ரூ.1,213,270)

மென்பொருள் பொதி ஒன்றினை விருத்தி செய்வதற்கு ஒரு சேவர் தேவைப்படுகின்றது. மென்பொருளானது இச் சேவர் இயந்திரத்தில் விருத்தி செய்யப்பட்டு, சேமிக்கப்பட்டுப் பேணப்படுகின்றது. எனவேதான், இவ் இயந்திரமானது கருத்திட்டத்தின் ஆரம்பம் முதலே தேவைப்படுகின்றது.

காசோலை எழுத்துரு அச்சடிப்பான் (ரூ.32,000)

இவ்வுபகரணமானது நாளாந்த அச்சிடல் செயற்பாடுகளின் பொருட்டு கணக்குப் பிரிவில் பயன்படுத்தப்படுகின்றது.

கணனிகள் (ரூ.5,030,400)

ERP மென்பொருளின் முழுமையான அமுலாக்கத்திற்கு முன்பதாகவே மென்பொருளை நிறுவுதல் மற்றும் பரீட்சித்தலின் பொருட்டு நிறுவனத்திற்கு அவசியமான வரையறைகளுடன் கூடிய கணனிகள் தேவைப்பட்டன.

எனவே, மென்பொருளை நிறுவுவதன் பொருட்டு அவசியமான வரையறைகளுடன் கூடிய கணனிகளைக் கொள்வனவு செய்ய வேண்டிய தேவையேற்பட்டது. கணனிகள் வழமையான தினசரிப் பணிகளின் பொருட்டும் தேவைப்பட்டதுடன் கொள்வனவுத் தீர்மானத்தை மேற்கொண்ட போது அத்தேவைப்பாடுகளும் கருத்திற் கொள்ளப்பட்டன.

தற்பொழுது கணனிகள் வரவேற்புக் கருமபீடத்திற்கும் காவலாளர் பிரிவுக்கும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. தேவையான கணனிகள் இல்லாமல் மென்பொருளை நிறுவுதலும் பரீட்சித்தலும் சாத்தியமற்று இருந்தமையால், தேவையான வரையறைகளுடன் கூடிய கணனிகளைக் கொண்டிராத பிரிவுகளின் பிரிவு ரீதியான கணனித் தேவைப்பாடு தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதன் பொருட்டு ஓர் சேவையானது நடாத்தப்பட்டது.

புதிய கணனிகளைக் கொள்வனவு செய்த பிரிவுகள் 9 பழைய கணனிகளைக் கணனிப் பிரிவிடம் கையளித்துள்ளன. அவற்றில் 2 கணனிகள் கணனிப் பிரிவினால் தற்பொழுது பயன்படுத்தப்படுவதுடன் 4 மேலதிகக் கணனிகள் ஏனைய பிரிவுகளுக்கு அவற்றின் கோரிக்கையின் பேரில் வழங்கப்பட்டுள்ளதுடன் 3 கணனிகள் திருத்தப்பட முடியாதனவாகவுள்ளன.

ரூ. 1,997,604 செலவில் ஓர் சேவரானது கணனிப் பிரிவிற்குக் கொள்வனவு செய்யப்பட்டதுடன் நூலகத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் எண்ணிமப்படுத்தல் கருத்திட்டத்திற்காக ரூ. 933,559 செலவில் மற்றுமொரு சேவரானது கொள்வனவு செய்யப்பட்டது.

ERP மென்பொருளுக்காகக் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களின் மொத்தப் பெறுமதியானது ரூ. 6,864,960 ஆகும்.

தற்பொழுது மென்பொருளானது இறுதி நிலையில் இருப்பதுடன், இதன்போது அதனை இயலுமானவரை விரைவில் அமுல்படுத்தும் நோக்கில் நுண் இசைவாக்கலானது மேற்கொள்ளப்படுகின்றது.

நிறுவனத்திற்கும் SARASA இற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின்படி ரூ.2,200,000 ஆனது ஒப்பந்த விலையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள போதிலும், ரூ.660,000 மாத்திரமே முற்பணமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. உடன்படிக்கையின் 25 ஆவது வாசகத்திற்கு அமைவாக, ERP மென்பொருள் விருத்தியின் முடிவில் இறுதிக் கொடுப்பனவானது மேற்கொள்ளப்படுகின்ற போது, தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(b) பெறுகைச் செயற்பாடுகளை அமுற்படுத்துகையில் தாமதங்களைத் தவிர்ப்பதன் பொருட்டு ஓர் நேர சூசியைப் பின்பற்றுவதன் மூலமாக பெறுகைத் திட்டத்தை ஓர் பயனுறுதிமிக்க கட்டுப்படுத்தும் பொறிமுறையாகப் பயன்படுத்துவதற்குக் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

(c) உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையைத் திருத்தியமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதுடன் கட்டுப்பாட்டுப் பலவீனத்தைத் திருத்தியமைப்பதன் பொருட்டு SARASA மென்பொருள் தொகுதியைப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

(d) மீளாய்வின் கீழுள்ள ஆண்டினதும் முன்னய ஆண்டுகளினதும் குறித்தசில பெறுகைச் செயற்பாடுகள் தொடர்பான கொடுப்பனவுகளில் தாமதம் எதிர்பார்க்கப்பட்டமையால், தேசிய சேமிப்பு வங்கியிலுள்ள அடிப்படைக் கற்கைகளுக்கான தேசிய நிறுவனத்தினுடைய 1-0015-01-03152 என்றஇலக்கமுடைய சேமிப்புக் கணக்கில் ரூ. 81 மில்லியன் வைப்பிலிடப்பட்டது.

தொடர்ச்சியாக குறித்த வைப்பில் ரூ. 29,967,389.51 ஆனது தொடர்புடைய வேலைகளின் பொருட்டுக் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள அதேசமயம் மீதியானது கொடுப்பனவுகளின் பொருட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

(e) பொது நிறுவனங்களுக்கான சுற்றறிக்கை இலக்கம் PED 1/2015 இற்கு அமைவாக, மாதாந்த பிரயாணப் படிக்கோ அல்லது அலுவலக வாகனங்களுக்கோ உரித்தினைக் கொண்டிராத நிறுவனத்தின் நடுத்தர மட்டத்திலான முகாமையாளர்களுக்கு இச் சேவையானது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், உரிய சேவையின் பொருட்டு அவர்களிடமிருந்து ஒரு தொகையைப் பெற்றுக்கொள்வதற்குரிய நடவடிக்கையை நிறுவனமானது மேற்கொண்டுள்ளது.

சுற்றறிக்கைக்கு அமைவாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள குறித்த சேவையின் பொருட்டு அறவிடப்படும் தொகையில் ஏதேனும் பற்றாக்குறை ஏற்படின், ஆளுநர்கள் சபையின் மேற்பார்வையின் மூலமாக மீளாய்வு ஒன்றினை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

3. ஏனைய கணக்காய்வு அவதானங்கள்

(a) வருடாந்த ஆராய்ச்சி மீளாய்விற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதிகளின் பற்றாக்குறை காரணமாக, வெளியாரிடமிருந்து அன்பளிப்புகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய தேவைறேப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த ஆராய்ச்சி மீளாய்வின் பொருட்டு ரூ. 355,000 மாத்திரமே ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் மீதி ரூ. 750,330.87 ஆனது வெளியாரிடமிருந்து சேகரிக்கப்பட்டிருந்தது.

வருடாந்த வரவுசெலவுத்திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட செலவுகள் குறிப்பு 20 இன் கீழாகவும் வெளியாரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த அன்பளிப்புகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ரூ. 750,330.87 பெறுமதியான செலவுகள் குறிப்பு 14A இன் கீழ் ஏனைய வருமானமாகவும் குறிப்பு 20A இன் கீழ் ஏனைய செலவுகளாகவும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளன.

2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த ஆராய்ச்சி மீளாய்வுக்கான அன்பளிப்புகளின் துல்லியமான தொகையை இனங்காண்பது சாத்தியமற்றதாகவுள்ளதுடன், அதன் மீதியானது அடுத்த ஆண்டின் போது பயன்படுத்தப்படும், இது வருடாந்த வரவுசெலத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

ஆராய்ச்சிகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் மீதிகளைப் பயன்படுத்திப் பேணப்படுகின்ற ஆராய்ச்சி நிதியத்திலிருந்து ரூ. 268,579.38 தொகையானது இலங்கை தேசிய மனித வளங்கள் அபிவிருத்திச் சபையினால் நடாத்தப்பட்ட "தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான ஆளுமை விருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக" செலவு செய்யப்பட்டுள்ளது.

மீளாய்வின் கீழான ஆண்டின்போது கூட்டு மீதியாக ரூ.1,984,035 கொண்ட செயற்பாடற்ற நிலையிலிருந்த 6 கருத்திட்டங்களின் விபரங்கள் பின்வருமாறு:

Bes மானியம்

கருத்திட்டத்திற்குரிய மீதியானது இரசாயனங்களைக் கொள்வனவு செய்ய வேணடியேற்படும் உடனடித் தேவைப்பாடுகள் அல்லது ஆய்வுகூட உபகரணத்தின்

அவசரமான திருத்தம் அல்லது எதிர்பாராத ஓர் போக்குவரத்துச் செலவு போன்ற செலவுகளை நிறைவு செய்வதன் பொருட்டுப் பேணப்பட்டு வருகின்றது.

HETC கருத்திட்டம்

HETC கருத்திட்டத்தின் ஓர் உப கருத்திட்டமாகவிருந்த நனோத் தொழில்நுட்பவியலும் உயர் பதார்த்தங்களும் கருத்திட்டமானது 2015 ஆம் ஆண்டு நிறைவுசெய்யப்பட்டுள்ளது. அக் கருத்திட்டத்தின் மிகுதிப் பணத்தை நனோத் தொழில்நுட்பவியல் கருத்திட்டத்திற்காகப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

IFS சுவீடன் மானியம்

கருத்திட்டமானது நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், மீதியாகவுள்ள பணத்தை சபையின் அங்கீகாரத்துடன் பொதுவான ஆராய்ச்சி நிதியத்திற்ககுப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இயற்கை விஞ்ஞானங்கள் பீடம் (OUSL)

கருத்திட்டமானது நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், மீதியாகவுள்ள பணத்தை சபையின் அங்கீகாரத்துடன் பொதுவான ஆராய்ச்சி நிதியத்திற்ககுப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆராய்ச்சி உபகரணங்கள்

விசேட உபகரணம் ஒன்றை (Walking Gradiometer மற்றும் இசைவாக்கல் பொதியுடன் கூடிய GPS தெரிவு B) கொள்வனவு செய்வதன் பொருட்டு ரூ. 1,500,000 ஆனது பெறப்பட்டிருந்தது. NIFS ஆனது முழுப் பெறுமதியாகிய ரூ. 2,643,508.93 ஐச் செலவு செய்து இவ்வுபகரணத்தைக் கொள்வனவு செய்துள்ளதுடன் தற்பொழுது அது களச் செயற்பாடுகளிற்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இத் தொகையை 2019 ஆம் ஆண்டிற்கான ஆராய்ச்சி உபகரணங்கள் மானியத்திலிருந்து அறவீடு செய்வதற்கு அவசியமான மாற்றங்களும் திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இயற்கைப் பொருட்களின் பிரித்தெடுப்பு சம்பந்தமான தேசிய வேலைப்பட்டறை

2016 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட இம் மாநாட்டில் எஞ்சிய இம்மீதியை 2019/2020 காலப் பகுதியின் போது நடாத்தப்படும் மாநாடுகள் மற்றும் வேலைப்பட்டறைகளின் போது பயன்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

இக் கருத்திட்டமானது நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், மீதியாகவுள்ள பணத்தை சபையின் அங்கீகாரத்துடன் பொதுவான ஆராய்ச்சி நிதியத்திற்குப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இழைய வளர்ப்பு

இக் கருத்திட்டமானது நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், மீதியாகவுள்ள பணத்தை சபையின் அங்கீகாரத்துடன் பொதுவான ஆராய்ச்சி நிதியத்திற்குப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

பாறை வெட்டுதல்

இப் பணத்தை உரிய நோக்கத்திற்குப் பயன்படுத்துவதற்கு கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

(c) இக்கட்டளைக்குரிய பொருட்களில் சுங்கப் பகுதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரு பொருட்கள் தவிர ஏனையவை விடுவிக்கப்பட்டுள்ளன. தடைநீக்க அனுமதியானது தேசிய அபாய ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையிடமிருந்து கோரப்பட்டுள்ளதுடன் மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடமிருந்து ஓர் அனுமதிப்பத்திரத்தை நாம் பெற்றுள்ளோம். எவ்வாறாயினும், தேசிய அபாய ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையிடமிருந்து தொடர்ச்சியாகத் தகவல்கள் கோரப்பட்டிருந்ததுடன் அதன் விளைவாக பொருட்களின் பெறுமதியை விடக் கூடுதலான தாமதவரிக் கட்டணத்தை நாம் செலுத்த வேண்டியிருந்தது. துரதிஷ்டவசமாக பொருட்கள் சுங்கப் பகுதியில் காணப்படவில்லை. விடயத்தை ஆளுநர்கள் சபைக்கு விளக்கியதன் பின்னர் அவசியமான சீர்ப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன.

(d) 2018 ஆம் ஆண்டுக்குரிய பெறுகைத் திட்டத்தின் மீளாய்வுக்குக் காரணமாகவிருந்த காரணங்களையும் பலவீனங்களையும் ஆய்வு செய்வதற்கும் 2019 ஆம் ஆண்டுக்குரிய பெறுகைத் திட்டத்தை மீளாய்வு செய்வதற்கான சீர்திருத்த நடவடிக்கையை ஆண்டின் நடுப் பகுதியில் மேற்கொள்வதற்கும் அதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கும் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

(e) முன்னயது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட அவதானங்கள் தொடர்பில் சீர்திருத்த நடவடிக்கையை மேற்கொள்வதற்குக் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

பணிப்பாளர்/NIFS
நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி/ பிரதம நிதி அதிகாரி



ANNUAL REPORT 2018

ජාතික මූලික අධ්‍යයන ආයතනය
හන්තාන පාර
මහනුවර 20000
ශ්‍රී ලංකාව

அடிப்படைக் கற்கைகளுக்கான தேசிய நிறுவகம்
ஹந்தான வீதி
கண்டி 20000
இலங்கை

National Institute of Fundamental Studies
Hantana Road
Kandy 20000
Sri Lanka